**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. நாமக்கல் கவிஞரின் இயற்பெயர் யாது?
2. தடுமாறும் மனதிற்கு அமைதி தருவது எது?
3. இளங்கோவடிகளின் தாயார் பெயர் என்ன?
4. வேதநாயகம் பிள்ளை எங்கு பணியாற்றினார்?
5. கடலில் பிறப்பது எது?
6. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் காப்பியம் எது?
7. காளமேகப் புலவர் பிறந்த ஊர் எது?
8. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் யாரால் பாடப்பெற்றது?
9. பாபிலோன் எந்த நாட்டில் இருக்கிறது?
10. தமிழ்நாட்டில் சிறந்த ஆறு எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. தமிழின் சிறப்பினை ஓர் உவமையின் மூலம் விளக்குக.
2. வெ. இராமலிங்கனார் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
3. இளங்கோவடிகள் இளமையிலேயே ஏன் துறவு பூண்டார்?
4. வாழ்வார், வாழாதார் யாவர் எனக் குறள் கூறுகிறது?
5. மழை பெய்வதற்கான அறிகுறிகள் யாவை?
6. சான்றோர்க்கு அழகாவது எது?
7. சீறாப்புராணம் குறிப்பு வரைக.
8. குற்றாலத்தில் எத்தனை அருவிகள் உள்ளது? அவை யாவை?
9. விரைட் சகோதரர்கள் வடிவமைத்த வான ஊர்தியைப் பற்றி எழுதுக.

10. மையீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன?
11. பன்னிரு திருமுறைகள் யாவை?
12. 'மரணத்துள் வாழ்வோம்' என்ற நூலைப் பற்றி எழுதுக.
13. சாளை இளந்திரையன் குறிப்பு வரைக.
14. கலவை வாக்கியம் என்றால் என்ன? எ.கா. தருக.
15. சொல் பின்வருநிலையணி என்றால் என்ன? எத்தனை வகைப்பெறும்? அவை யாவை?

**பகுதி – இ**

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. திருக்குறள்–குறிப்பு வரைக.
2. கண்ணதாசனின் இயேசு கிறிஸ்து பாடலின் பொருளை எழுதுக.
3. பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
4. மங்கலப் பொருள் ஏந்திய மகளிர் எவ்வாறு இருந்தனர்?
5. 'கண்வனப்பு கண்ணோட்டம்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலின் விளக்கத்தை எழுதுக.
6. நான்மணிக்கடிகை, செல்வம் தரும் வலிமையைப் பற்றி என்ன கூறுகிறது?
7. திசைப்பெயர் புணர்ச்சி–விளக்குக.
8. ஆகுபெயர் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?.

**பகுதி – ஈ**

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Aswer any one of the following questions in fifteen sentences.*****(1x10=10)**

1. 'புகழ்' அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.
2. காவிரி ஆற்றின் பிறப்பு. சிறப்பு பற்றி எழுதுக.
3. நற்குடிப்பிறப்பு மற்றும் சினம், விடுதலை பற்றி விளம்பிநாகனார் பாடல் வழி விளக்குக.

**பகுதி – உ**

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. தமிழ்மொழி, தமிழ்மக்கள், தமிழ்நாடு ஆகியவை குறித்துப் பாவாணர் கூறும் கருத்துகளை எழுதுக.
2. வல்லினம் மிகும் இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

.....